# ஞானதீபம்.

புத்தகம்—1. | 1893 ௵ மாசி ௴ 1 ௳ | இலக்கம்—7.

தக்பீர் சொல்லும்பொழுது பொய் சொல்லாது நமது கல்பைப் பேணிக்கொள்ள வேண்டும். இமாம் கஸ்ஸாலி றகுமதுல்லாகு அவர்கள், அல்லாகு அக்பறென்று மொழிகிற நேரத்தில் கல்பு வேறொரு பொருளைப் பெரிதாக எண்ணியிருக்கின்ற ஹாலாகயிருந்தால், அவன் பொய் சொன்னவனாகி விட்டானென்றும், பொய் சொன்னவனாக அல்லாகுத்தாலா அவனைக் குற்றம் பிடிப்பானென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். தவ்பாவைக் கொண்டும் அல்லாகுத்தாலாவின் கிருபையைக்கொண்டும் நமது வணக்கங்களேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அதின் பின்னால் வஜ்ஜஹ்து ஓதுகிறோம் வஜ்ஜஹ்து வஜ்ஹிலில்லதீ பத்தறஸ்ஸமாவாத்தி.

வானங்களையும் பூமியையும் படைத்தவன் புறமாக என் முகத்தைத் திருப்பினேனென்று சொல்லுகிறோம். ஆனால் அல்லாகுத்தாலாவின் புறமாக நாங்கள் முகத்தைத் திருப்பினோமென்ற சொல்லைக்கொண்டு அவனுக்கு ஒரு திசையல்லது தலமிருக்கின்றதென்கிற கருத்தல்ல, அவன் அவைகளையெல்லாம் விட்டுந் தூய்தானவன். நமது உள்ளமையை அவன் நாட்டத்திலும் உவப்பிலும் திருப்பினேனென்று சொல்லுதலாயிருக்கும் நம்முடைய நாட்டம் அந்நேரத்தில் நமது வேலைகளிலும் தொழில்களிலும் வியாபாரங்களிலுமிருக்குமேயானால் நாம நமது உள்ளமையை அவன் புறமாகத் திருப்பினேனென்று சொல்வது, நமது தொழுகையின் தொடக்கத்திலேயே பொய் சொல்வதாயிருக்கும். இதைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருந்து கொள்ளவேண்டும்.

பின்பு, ஹனீபன் முஸ்லிமன்.

தப்பான மார்க்கங்களை விட்டும் விலகினவனாகவும். முஸ்லிமானவனாகவுமென்று சொல்லுகிறோம். நாம் முஸ்லிமென்று சொல்வதற்கு முஸ்லிமுடைய குணம் நம்மிலிருக்க வேண்டும், நபிசல்லல்லாகு அலைகிவசல்லம், முஸ்லிமாகிறவன் யாரானால் அவன் கை

கை விட்டும் நாவை விட்டும் முஸ்லிம்கள் சலாமத்தாயிருப்பார்கள். அவன் தான் முஸ்லிமென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் முஸ்லிம்கள் பெயரில் குரோதமும், பொறுமையுங் கொண்டவர்களாகவு மவர்களுக்குத் தீங்குகள் செய்கிறவர்களாகவும், அவர்கள் ஐபுகளை மிகவுஞ் சந்தோஷமா யெடுத்துப் பேசுகிறவர்களாகவும், அவைகளை மிகவும் விருப்பமாய்க் கேட்கிறவர்களாகவுமிருந்தால், நமது கையை விட்டும் நாவை விட்டும் முஸ்லிம்களுக்கு என்ன சலாமத் திருக்கின்றது? இவ்விதமான நடக்கைகளை யுடையவர்கள் அல்லாகுத்தாலாவின் சமுகத்தில் நான் முஸ்லிமாயிருக்கிறேனென்று சொல்வது இமாம்களுடைய சொற்படிக்குப் பொய் சொல்வதாயிருக்கும். முஸ்லிம்களுடைய பெயர்களைத் தரித்துக்கொள்வதும், உடைகளை யணிந்துக் கொள்வதும் முஸலிமாக்க மாட்டாது, கல்பு முஸ்லிமாயிருக்க வேண்டும். கல்பு முஸ்லிமாயிருந்தால் நடக்கையில் வெளியாகும். அந்த நடக்கைகளிற் பிரதானமானவைகள் நாயகமவர்கள் குறித்துக் காட்டியவைகளா யிருக்கும். நாம் முஸ்லிமகளுக்குத் தீமைகளைச் செய்கிறவர்களா யிருந்தால், அதைக்குறித்து விஷனங்கொண்டு இனிமேல் நமது கையை விட்டும் நாவை விட்டும் முஸ்லிம்களுக்குத் தீங்குகளுண் டாகாமல் காப்பாற்றிக் கொள்வோமென்கிற நிய்யத்தைத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வமா அன மினல் முஷ்ரிக்கீன்.

நான் இணைவைத்தவர்களி லுள்ளவனல்லவென்றுஞ் சொல்லுகிறேன்.

நாம் முஸ்லிமாயிருக்க, நாம் முஷ்ரிக்கீன்களி லுள்ளவனல்லவென்று சொல்லவேண்டிய தென்ன? இணைவைக்கிற தென்பதின் பொருள், விக்கிரகங்களை வணங்கிறது மட்டுமல்ல, பலவிதமான இணைகளிருக்கின்றன. அல்லாகுத்தாலாவிலும் பொருளை பெரிதாய் நினைத்தாலும் அல்லாகுத்தாலாவில் நம்பிக்கை வைப்பதற்கு வதலாய் மனிதர்கள் பெயரில் நம்பிக்கை வைத்தாலு மிணையாகும். இவ்விதமான இணைகளை விட்டு மனத்தை நீக்கி, அல்லாகுத்தாலாவின் பெயரில் ஆசையும் நம்பிக்கையுங் கொண்டவன் நாவால் வருஞ் சொல்தான், நான் இணைவைக்கிறவர்களி லுள்ளவனல்ல வென்பது

வனுஸ்கீ வமஹ்யாய வமமாத்தீ லில்லாஹி றப்பில் ஆலமீன்.

எனது தொழுகையும் ஹயாத்தும் மவுத்தும் சர்வலோகங்களையும் படைத்தாதரிக்கின்ற அல்லாகுத்தாலாவுக் குடையதா யிருக்கும்.

இந்தப் பேச்சாவது:—தனக்கு ஒரு வணக்கமும், தனக்கொரு நபுசும், தனக்கொரு ஹயாத்தும், தனக்கொரு தத்துவமு மில்லையென்றும், சகலதும் அல்லாகுத்தாலாவைக் கொண்டேயென்றும் உறுதிப்படுத்தித் தவ்ஹீது செய்யுஞ் சொலலாயிருக்கும். இப்படிச் சொல்லும் பொழுது தன் கல்பும் நபுசும் தேட்டமும் நாட்டமும் அல்லாகுத்

தாலாவுக்கு ஒப்புக்கொடுத்தவனுடைய ஹாலாக இருத்தல் வேண்டும்.

லாஷரீக்கலகூ வபிதாலிக உமிர்த்து வஅனு மினல்முஸ்லிமீன்.

அவனுக்கு இணையில்லை இந்தப்படியே நான் ஏவப்பட்டிருக்கிறேன். நான் முஸ்லிமானவர்களிலா யிருக்கும்.

இதின் கருத்தாவது:—நமது மார்க்கமொன்றே அல்லாகுத்தாலாவை ஒருமைப்படுத்தி அவனல்லாது வேறொன்றுமில்லை, வேறு தத்துவமுமில்லை, சகலமும் அவனே என்று தவ்ஹீது செய்யும்படி ஏவி, அந்த ஏவலுக்குக் கீழ்ப்பட்ட முஸ்லிமாயிருக்கிறே னென்று சொல்லுதல், இன்னம்,

அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர்றஜீம்.

தூரத்தப்பட்ட செய்த்தானை விட்டும் அல்லாகுத்தாலாவிடங் கார்மானந் தேடுகிறே னென்று சொல்லுகிறோம். செய்த்தான் எங்களுடைய சத்துருவாயிருக்கும். அவன் எங்கள் தொழுகையைக் கலைத்துப் பழுதாககத் தெண்டிக்கிறவன். அவனொரு சஜுது செய்யாமல் ஏவலை மீறினதால் முனியப்பட்டவனுகி விட்டான். அவனை விட்டும் நாஙகள் காவல் தேடுகிறதானுல், அவனுக்கு இஷடமானவைகளை விட்டும் நீங்கவேண்டும். ஒரு மனிதன் ஒரு சிங்கததை யல்லது புலியைக்கண்டு அதை விட்டும தப்பிக்கொள்ள நடினுல், அந்த விடத்தை விட்டுத் தப்பியோடுவான். மனிதர்களே! என்னை இந்த மிருகங்களை விட்டும் காப்பாற்றுங்களென்று சத்தமிட்டுக்கொண்டு அந்த மிருகத்தை நெருங்குவானே? அதுபோலவே நாம் ஷைத்தானின் பூங்காவனத்திலிருந்து கொணடும், அவனின் விருந்தினர்களையச் சுகித்துக்கொண்டும், அவனுக்கு இஷடமானவைகளையும் அல்லாகுத்தாலாவுக்கு வெறுப்பானவைகளையுஞ் செய்துகொண்டுமிருக்கிறவர்களாய் அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீமென்று சொல்வதிற் பலனென்ன? அவனை விட்டோடவேண்டும். அவனுக்கு விருப்பமானவைகளை விட்டெறிய வேண்டும் அவனின் மருட்டுதலுக் கஞ்சவேண்டும். அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீமென்கிற திறவுகோலைக்கொண்டு அல்லாகுத்தாலாவின் கார்மானமென்கிற கோட்டைக்குள் நுழைய வேண்டும். பின்பு பாத்திஹா சூறத் தோதுகிறோம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

புகழெல்லாம் சர்வலோகங்களையும் தாபரிக்கின்ற அல்லாகுத்தாலாவுக்காயிருக்கும். அல்லாகுத்தாலாவை நாம் காணவுமில்லையே. அவன் தாபரிப்பதைக் கண்டுமில்லையே அப்படியிருந்தும் அவன் தாபரிக்கின்ற றப்பு என்று புகழ்கிறோம். இதற்கு அத்தாட்சி என்ன? இதைக்குறித்துச் சில காரியங்களைச் சொல்லுகிறேன்.

ஒவ்வொருவனுக்கும் சகல சரித்திரங்களிலும் தன் சொந்தச் சரித்திரமே மிகவும பிரதானமானது. சகல அறிவுகளிலுந் தன் நபுசை யறிவதே மி

கவும் அவசியமானது. உனது தொடக்கத்தை பிக்கிட்டுப்பார், அப்பொழுது அல்லாகுத்தாலாவின் வல்லபமும் அவனே உன்னைப் படைத்தாரிப்பவனென்பதும், உன்னில் யாதொரு தத்துவ மில்லையென்பதும் திட்டமாகும். நீ யுன்றாய் வயிற்றிற் றரிக்குமுன் மூலங்களெல்லா மிருந்தன. நீ! இல்லாதவனா யிருந்தாய். மண்ணிலிருந்து முளைத்த தாபரவஸ்துகளையுமவைகளைத்தின்ற உயிர்ப்பிராணிகளின் மாமிசங்களையும் உன் தகப்பனருந்தி இரத்தமாகி, அந்த இரத்தம் இந்திரியமாய்ச் சமைந்தது. அந்த இந்திரியத்திலொரு துளியே உன் பூர்வமாயிருக்கும். இதைக்குறித்து அல்லாகுத்தாலா குறுவானிற் பலவிடங்களிலும் மனிதனே! உன்னை யொரு சிறு துளி நுத்துபாவைக் கொண்டு படைத்தேன். அதை நோட்டமிட்டுப்பாரென்று திருவுளம் பற்றி யிருக்கிறான். நீ! ஒரு சிறு துளி நுத்துபாவா யிருந்த நேரத்தில் உனது ஊலை பிக்கிட்டுப்பார். அது சொற்ப நேரம் காற்றுப்பட்டால் காய்ந்து அழிந்து போகும். அல்லாகுத்தாலா உனது தாய்க்கும் தகப்பனுக்கும் ஒருவர் பேரிலொருவர் உவப்பும் ஆசையுமுண்டாகச் செய்து, அவர்களின்ப மனுபவிக்கும் பொழுது தகப்பனின் உடம்பிலிருந்து தாயின் கற்பவறைக்கு அது வரச்செய்தான். பின்பு அது இரத்தக் கட்டியாகி அச்சமைந்து மாமிசந் திரண்டு பிண்டமாகி தொண்ணூற்றொன்பது எலும்புகளால் வரிசையிட்டு முன்னூற்று முப்பத்தேழு சந்துகள் பொருத்தப்பட்டு, எழுபத்திநாயிரம் நரம்புகளா லிறுக்கப்பட்டு கால் கை தலை முதலிய அங்கங்கள் வகுக்கப்பட்டு, ஒன்பது பெரிய துவாரங்களும், மூன்றரைக்கோடி உரோம துவாரங்களுந் திறக்கப்பட்டு மனுரூபமானதை நினைத்துப்பார். அந்த நுத்துபாத் துளியை இவ்வித மனுவாக்கியதார்? உலகத்திலுள்ள மனுக்களும் ஜின்களெல்லாம் சேர்ந்து இவ்விதஞ் செய்வார்களா? ஒரு நரம்பு கூடினுங் குறைந்தாலும் அவையவையகளமைய வேண்டிய விடத்திலமையாமலிருந்தாலும் குறை வுண்டாகி விடுமே. இந்த வேலைகளெல்லாம் அந்த இருட்டறையில் யாதொரு இயந்திரங்கள் சூத்திரங்களில்லாமற் செய்து நிரப்பமாக்கினதார்? உன் தாயா வுன் தகப்பனா? அவர்களல்லவென்றால் வேறு ஆர்? நீ! உன் தாய் வயிற்றி லுனக்கொருவரும் ஆகாரம் கொடுக்கக்கூடாத தருணத்தி லுன்றாயின் அன்னசாரம் தொப்புள் வழியா யுன் சரீரத்திற் சென்று நீ வளரச் செய்ததார்? ஒரு மனிதன் சமர்த்தான கைவேலையைக் கண்டாலாச்சரியப்படுகிறாய் புகழுகிறாய், உனது சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பும் புதுமையை யுண்டாக்கத்தக்கதா யிருக்க, அவைகளை யேன் பார்த்து ஆச்சரியப்படுகிறாயில்லை. உனது எலும்புகளைப்பார்! அந்தந்த விடத்துக்குத் தக்க பருப்பமாயும் சிலது உருண்டையாயும், பற்பல வடிவமாயு மிருக்கின்றதே ஒரு துளி இந்திரியம் இவ்வித மெப்படிச் சமைந்தது? உன்னுடைய கண்ணை நோட்டமிடு, அது ஏழு தட்டை யுடையதாயும், இருபத்தொரு நரம்புக

ளாற் கட்டப்பட்டதாயு மிருக்கின்றன. அவைகளிலொரு நரம்புஅல்லதுசவ்வு, குறைந்தால் பார்வை யில்லாமற்போகும். கண்ணைப் பல புறமும் திருப்பிப் பார்க்கத்தக்க விதமாய்ச் சமைந்திருப்பதைப் பார், சற்று நேரம் கண்ணைத் திறந்து பார்த்தால் கண்ணிலுள்ள ஈரமிப்பறறு சூடுண்டாகி விடும். அப்பொழுது கண் சிமிட்டப்பட்டு கண்ணுக்கு நீரிரங்கிக் கண் குளிர்ச்சியாகிவிடும். கண் இமை தூசிபோலுள்ளவைகள் கண்ணில் விழுவதைத் தட்டிப்பேணி வரும். இவ்விதம் நீ உனது பராக்கிலும் வேலையிலு மிருக்க, ஒவ்வொரு உறுப்பையும காப்பாற்றி வருவது ஆர்? உனது வாயின் புதுமையையும் நாவின் புதுமையையுங் கவனி, வாயால் எத்தனை யெத்தனை சொற்கள் பல சத்தங்க ளுடையனவாயும், கேட்பவர்களுக்கு விளங்கத்தக்கதாயும் வெளியாகும் புதுமையை யோசி? நீ தீனை வாய்ற் போடுகிறாய், நாவு அநதத தீனை அது அதற் கிணக்கமான பற்களிடத்தே நெருக்கிக் கடிக்கவுஞ் சப்பவுஞ் செய்து, உமிழ் நீருஞ் சேர்ந்து கலந்து பதமாகி விழுங்கப்படுகிறது. நீ நாடாமலும் நீ செயவிக்காமலும் அந்தந்த உறுப்புகள் அவை யவைகளின் வேலைகளை ஓயாமல் செய்து வருகின்றன. தீன் இரைக் குடலிற் செல்ல, ஜீரண நீர் கலந்து ஜீரணமாகி ஜீரணமான சாறு ஈரலிற்போய் அங்கு சுத்தப்பட்டு, அதிலுள்ள பற்பல நீர்களும் அந்தந்த அவையவங்களா விழுக்கப்பட்டு சுதத இரத்தம் இருதயத்துக் கேறி நுரை ஈரல் சுவாசித்த காற்றிலுள்ள சுவாச வாய்வு இரத்தத்தோடு சேர்ந்து நரம்பு வழியாகச் சரீர முழுவதும் பரவச் செய்யப்படுகிறது. இவைகளொன்றும நடக்கிறது உனக்குத் தெரியாதிருக்க, அவ்வேலைகளெல்லாம் உன் உறக்கத்திலும் விழிப்பிலும் சற்றும் பிசகில்லாமல் நடந்துவருகிற தல்லவா? இந்த வேலைகள் ஒரு நொடி நேரமாவது சுணங்கினு ஒனது அமர்ந்து உயிரிழந்து போவதற்காகும். ஆயிரம் இயந்திரங்களை வைத்து இலக்ஷம் ஜனங்கள் செய்தாலும், செய்து நிறைவேற்றக் கூடாத வேலைகள் எவ்வேளைய முன் சரீரத்தில் நடந்து வருகின்றன. ஒவ்வொரு நரமபிலும் இலக்ஷக்கணக்கான இரத்தப்பைக ளிருக்கின்றன, ஒவ்வொன்றையும் ஒரு மஷீனல்லது இயந்திரத்துக்கு ஒப்பாக்கலாம். மனிதன் பாவிக்கிற இயந்திரங்களெல்லாம் சொற்பகால்த்துக் கொருமுறை பழுது பார்க்கவும் செப்பனிடவும் வேண்டியதா யிருக்கும. சரீரத்திலுள்ள இயந்திரங்களோ அதை யதுதானே செப்பனிட்டுக்கொண்டு வேலைகளைச் செவ்வையாய்ச் செய்துவரும். நாம் நம்முடைய ஹயாத்து முழுவதையும் வயிற்றின் தேட்டத்துக்கும் மோகத்தின் விருப்பத்திற்கும் போக்கிக் கபுறையிற் புகுதுகிறோம். இந்த மருட்டுதலென்கிற திரையை நீக்கி, உன் பிக்றென்கிற கண்ணாற் பார்த்தால் உன் சரீரம் ஒரு ஆலமென்பதைக் காண்பாய். அதிலுள்ள புதுமைகளைப் பார்க்கப் பார்க்க, ஆச்சரியமு மானந்தமும் பொங்கி அல்ஹம்துலில்லா, அல்ஹம்துலில்லா என்று சொல்வாய். ஒரு மனிதனின் சமர்த்தான கைவேலையைக் கண்டால் மெச்சுகிறோம, புகழுகிறோம். ஒவ்வொ

ரு . டைப்பிலுமுள்ள புதுமைகளைச் சிந்திக்கவும், அப் படைப்புக்களைப் படைத்தோனைப் புகழவும் மனந் திரும்புதில்லையே, அல்லாகுத்தாலாவின் சாமார்த்தியத்தைப்பார், முகமோ ஒரு சாண் விலாசமுள்ளது. துன்யாவிலுள்ள மனிதர்களில் இருவர் முகங்கள் ஒரே வடிவாயிருக்கக் காணோம. ஒவ்வொருவர் முகமும வித்தியாசமாகப் படைத்திருக்கும, யூகம் மனிதரின் புத்திக்குமட்டுப்படுகின்றதா, இன்னம் உலகத்திலுள்ள ஒவ்வொருவர் குரலும் வித்தியாசமாகவும் கேட்டுப் பழகினவர்கள் முகத்தைக் காணாமல் குரலைக்கொண்டு இன்னாருடைய குரலென் றறிந்து கொள்ளத் தக்கதாகவு மிருப்பதின் புதுமைக்கென்ன சொல்லலாம்.

நீ தாயின் வயிற்றிலிருந்து வெளியான நேரத்தில் உனது ஹாலை நோட்டமிடு, எவ்வளவு பெலக் குறைவாயிருந்தாய், உனக்குத் தேவையான தின்னதென் று தெரியாத நேரத்தில் அல்லாகுத்தாலா உனக்கிணக்கமான ஆகாரத்தை உன் தாயின் மார்பிலுண்டாக்கி அதை நீ உறிஞ்சிப் புசித்து வளர்ந்து வந்தாய். உனக்குத் தின் தின்னும் வயது வரும்பொழுது பற்பல தின்களைக் கடிக்கவும சப்பவு மிணக்கமான பற்களைத் தந்தான், உன்னை வளர்க்கிற தற்காகத் தாய் தகப்பன் கல்புகளிற் கிருபையை யுற்பவித்தான், உனது சவுக்கியத்திற்கும் இன்பத்திற்கும் செல்வத்திற்கும் துன்யா முழுவதிலும் பல நிஉமத்துகளையும் நிரப்பிவிட்டான், இந்த நிஉமத்துகளையெல்லாம் தந்தருளினவனை மறந்துவிட்டாய், அந்தஇன்பங்களைத் தேடுவதிலும் சுகிப்பதிலும் மருண்டுவிட்டாய், பெறுமதியற்றதைப்பெறுமதியாகக்கண்டாய், பெறுமதி யுள்ளதைப்பெறுமதிக்குறைவாய்க்கண்டாய் உன்சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பின் பெறுமதியையும் மதி, உன்கண்களுக்குஎன்ன பெறுமதி கொடுப்பாய், உன் செவிகள் என்ன பெறுமென்று சொல்வாய், உன் பற்க ளொவ்வொன்றுக்குமென்ன கொடுப்பாய், உன் மூளைக்கு என்ன கொடுப்பாய், இவ்விதம் நீ உன் சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளையும அவைகளிலலாது போனால் விளையக்கூடிய நஷ்டங்களையும் வருத்தங்களையும் நிதானித்து மதித்துப் பார், அப்பொழுது உனக்கு துன்யா முழுவதும் உனது சரீரத்தின் பெறுமதுக்கு வராதென்பதை யறிவாய், உனது அக்கிலுக்கு முனது புத்திக்கும் யோசனைக்கு மென்ன பெறுமதி வைப்பாய் அக்கிலில்லாது போனால் மிருகங்களின் தன்மையாகி விடுவாய், அந்த அக்கிலைக்கொண்டே மற்றும் துன்யாவிலுள்ள படைப்புக ளெல்லாவற்றுக்கும் எஜமானாயிருக்கிறாய், புத்தி பேதலித்த பைத்திய காரனின் ஹாலைப்பார்த்து உனது அக்கி லென்ன பெறுமென்றுசொல் இன்னம் அல்லாகுத்தாலா தன் சிபத்துகளில் ஹயாத்து, அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பேச்சு ஆகிய சிபத்துகளைக் கொடுத்து நான் ஒரு வஸ்த்திலும் வெளியாக வில்லை, இன்சானில் வெளியாகி யிருப்பதைப் போலென்றும், இன்சான் என்னிடத்தேயிருக்கின்ற தகுதியை யறிவானேயானால், நானே இராஜாக்களுக்கெல்லா மிராஜன், இராஜாங்கம் எனக்கே யன்றி வேறொருவருக்கு மில்லையென்று செ

ல்வானென்று திருவுளம் பற்றி யிருக்கிறான். இப்படிப்பட்ட உயர்ந்தியான தறஜாவை யுடையவர்களாகிய நாம் எங்கள் வயற்றுக்கும் பர்ஜூக்கும் அடிமையாகி ஹலாக்காவதற் கிடமாக்கிக் கொள்ளுகிறோம்

அல்லாகுத்தாலா நமது சரீரத்திலுள்ளவைகளை யெல்லாம் நமக்கருளி, அவைகளையெல்லாம் தாபரித்து வருவது மல்லாமல் நமக்காக துன்யாவில் நிஉமத்துகளை நிரப்பிவைத் திருக்கிறான், அந்த நிஉமத்துகள் மிகுதமாக்கி வைத்திருப்பதால் அவைகளின் பெறுமதி நமக்குத் தெரியாதிருக்கின்றது, காற்று நம்மைச் சூழ்ந்திருக்கின்றது, சொற்ப நேரம் சுவாசிக்கக் காற்றில்லாதுபோனால் மனித ரிறந்து போவார்கள். அந்தக் காற்றில் மூன்று வாய்வுகள் சேர்ந்திருக்கின்றன. சுவாசவாயு, சலவாயு, உப்புவாயு வாகியவைகள், இவைகளெவ்வொன்றும மனிதனுடைய சரீரத்துக்கு உணவையுஞ் சுகத்தையுங் கொடுக்கத்தக்க பிரமாணமாய்ச் சேர்ந்திருக்கின்றன, அவைகளிலொன்றுகூடினாலுங் குறைந்தாலும்மனிதனுக்குச் சீவிக்கக் கூடாமற்போகும், துன்யாவிலுள்ள வஸ்துகள் யாவிலும காற்று மனிதனுககு மிகவும் பெறுமதி யுடையதா யிருக்கின்றது, அதை விலைகொடுத்து வாங்காமலும் சரீரத்துக்குச்செலுத்த பிரயாசமெடுக்காமலும், நா முறங்கும் பொழுதும விழித்திருக்கும் பொழுதும் சரீரத்துக்குள் இழுக்குதற்கு நுரை ஈரலென்கிற இயந்திரமுண்டா யிருக்கின்றது மனிதனுக்கு காற்றுக்கு இரண்டாவதாய்த் தண்ணீரை பபேசலாம். இதின் பெறுமதி தண்ணீரில்லாத நேரத்திற் றெரியும், இதை ஆகாசத்திலிருந்து மழையாகவும் ஆறுகளாகவும நீர்த்தாரைகளாகவும றுகளாகவும அல்லாகுத்தாலா தந்தருளியிருக்கிறான், நமக்கு மிகவும தேவையானவைகளை மிகவு மிலேசாய்ப் பெற்றுக்கொள்ளுதற்குச் செய்திருக்கிறான், மரங்களால் கனிவர்க்கங்களையும். தாபரவஸ்துகளால் மனிதனுக்கு ஆகாரமானவைகளையும் மருந்தானவைகளையும பெலமுண்டாக்கக் கூடியவைகளையும் இன்பமானவைகளையும பற்பல இரேசங்களுடைய வைகளையுமுண்டாக்கி யிருக்கிறான்.

மிருகங்கள் பக்ஷிகள் முதலிய சீவசெந்துகளால் அநேக பலன்கள் பெற்றுக்கொள்ளுதற்கிடமாக்கியிருக்கிறான்.

வானலோகத்திலுள்ள சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் சகலதையும் மனிதர்களுக்கு உபயோகமாக்கி யிருக்கிறான். சூரியன் அல்லா என்கிற இஸ்மின் மழூஹறாகவும், சந்திரன் றகுமானென்கிற இஸ்மின் மழூஹறாவும், சனி என்கிற கிரகம் வாஹிது என்கிற இஸ்மின் மழூஹறாகவும், செவ்வாய் என்கிற கிரகம் குதறத்தென்கிற இஸ்மின் மழூஹறாகவும, சுக்கிரனென்பது இறுகத்தென்றும் இஸ்மின் மழூஹறாகவும, புதன் என்னுங் கிரகம் இல்மென்னும் இஸ்மின் மழூஹறாகவும் மற்றும் ஒவ்வொரு நக்ஷத்திரமும அல்லாகுத்தாலாவுடைய அஸ்மாவுல் உஸ்னாவிலுள்ள இஸ்முகளின் மழூஹறாகவுமிருக்கின்றன. இவைகளுக்கும மனித

னுக்கு முள்ள சம்பந்தங்களை இந்த [illegible] ப துல் கீழாகும். ஆகிலு மனிதனின் அல்லாகுத்தாலாவுடைய [illegible] க்களுடையவும் மழுவுரு வி[illegible]பதை விளக்கிறல் இவைக ளுக்கும மனிதனுக்கு முள்ள சம்பந்தங்கள் தெரியவரும்.

இவ்விதம அல்லாகுத்தாலா மனித னை ஒரு துளி இந்திரியத்திலால் இப்படி பட்ட குதறத்தான படைப்பாய்ப் படைத்துத் தாபரித்து வருவதால் புக ழுக்குரியவன் அவனொருவனே யன்றி வேறொருவருமில்லை. நமக்கொருவன் ஒரு உபகாரஞ் செய்தால் அவனைப் புக ழுகிறோம், ஆகுதல் அவன் நமக்குஉபகார ஞ்செய்த சம்பை யாலோசித்தால் நம்மி டம வதல் பெற்றுங்கொள்ளும் நாட்ட ம வைத்திருக்கலம், அல்லது புகழை விரும்பிச் செய்திருக்கலாம், அல்லது அல்லாகுத்தாலா விடம தவாபைப் பெ ற்றுக்கொள்ளும நாட்டம வைத்துச் செய்திருக்கலாம். இந்தக் காரணங்க ளெல்லொன்றும தன் நயத்தையே கருதியதாய் விளங்கும், அல்லாகுத்தா லாவோ அலத்த யிட்டும் தேவை யற்றவன், அவனுடைய றகுமானென் கிற இஸ்மைக்கொண்டு வெளியாகி ற ப்பென்கிற இஸ்மைக்கொண்டு தாபரி த்து வருகிறான்.

ஆகையால் புகழெல்லாம ஆலமங்களை யெல்லாம படைத்துத் தாபரித்துவரு கிற அல்லாகுத்தாலாவுக்கா யிருக்கு மென்று அந்த சூறத்தில் புகழ்ந்திருக் கிறது.

அர்றகுமானிர்றஹீம. பரிபூரண த யாபரன் மூமின்களுக்குத் தனது கரு ணாகரன்.

அல்லாகுத்தாலா துன்யாவில் மனித ர்களுக்குக் கொடுத்திருக்கிற நிஉமத்து களை மட்டிடக்கூடாது. நல்லவன் பொ ல்லாதவன் சகலருக்கும றகுமானென் கிற இஸ்மைக்கொண்டு வெளியாகி வி ட்டான், ஆகிறத்தில் மூமின்களுக்கு அவன் வாக்குச்சொல்லிய நிஉமத்துக ளெல்லாம் றகீமென்கிற இஸ்மைக் கொண்டு வெளியாக்குவான். பின்பு:--

மலிக்கியவ் மித்தின். நடுத்தீர்வையின் நாளைக்கு இராஜன்.

மூன் அவனுடைய கிருபையையும் தயவையும் குறித்துப் புகழ்ந்தபின், ந டுத்தீர்வையின் நாளைக்கு இராஜனெ ன்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனம் அச்சத்துடனுமமேன்மைபாரா ட்டியும் புகழும் புகழாயிருக்கும் அவ ன் இராஜாக்களுக்கெலலாம் இராஜனா ன படியால் மேன்மைக்கு உரித்துடை யவன் வேறில்லை அவனே யல்லாமல் நடுதீர்வையின் நாளையைக் குறிப்பதா ல அந்த நாளையின் பயங்கரமும் திகிலு ம் மனத்தி லுதித்திடும் இவ்விதம புக ழ்ந்த பின்:—

இய்யாக்க நஉபுது வயிய்யாக்க நஸ்த யீன் உன்னையே வணங்கின்றோம். உ ன்னிடத்தே உதவி தேடுகின்றோம் எ ன்று உறுதிப்படுத்திய பின்:—

இஹதினஸ்ஸிறாததல் முஸ்தகீம் சி றாத்தல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில் மகுளூபி அலைஹிம் வலள்ளா லீன் ஆமீன்.

நேரான பாதையைக் காட்டி யரு ளென்று இரந்து கேட்கிறோம். அந்தப் பாதையாகிறது நபிமார்கள் சுஹதாக் கள் முதலிய ஜயம் பெற்றவர்களுக்குக் காட்டிய வழியாகவும், நேர்பாதையை த் தவறின யகூதி நசாறாக்களுடைய வழியல்லாததுமானதா யிருக்கும்.

குருமார்களே!

இந்த குறுவானிலுள்ள சூறத்தை சா டையாய் விளக்கிக் காட்டினேன். இவ் விதமான உயர்த்தியான பேச்சும ஆன மான கருத்தும் உங்கள் வேதப்புத்தக முழுவதிலு முண்டா?